## சட்டப்பேரவையில் அமைச்சர் கயல்விழி செல்வராஜ் பதிலுரை...

8ஆம் பக்கத்தொடர்ச்சி

அளித்த சட்டமன்ற உறுப்பினர்கள் அவற்றைத் திரும்பப் பெற்றுக் கொண்டு, இம்மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அவர்களின் ஆலோசனைப்படியும், வழிகாட்டுதலின்படியும் துறை சார்பாக 19 அறிவிப்புகளை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

**அறிவிப்புகள்.**

1.மாணாக்கர் கல்வியில் உயர்ந்த நிலையை அடைவதற்கும் கல்வி பயில சிறந்த சூழலை அமைத்து தரவும் நவீன வசதிகளுடன்கூடிய விடுதிகள் சிவகங்கை, ஈரோடு, கடலூர் மற்றும் விருதுநகர் ஆகிய 4 மாவட்டங்களில் ரூ.15.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும். விடுதி மாணாக்கருக்கு ஒருங்கிணைந்த சமையலறைமூலம் உணவு வழங்கும் "அமுத சுரபி" திட்டம். . .

2. திருச்சி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மூன்று மாவட்டங்களின் நகர்புரத்தில் உள்ள விடுதிகளில் ரூ.9.00 கோடி செலவில் ஒருங்கிணைந்த சமையலறைமூலம் சுகாதாரமான மற்றும் தரமான உணவு வழங்கும் திட்டம் விரிவுபடுத்தப் படும். இதன்மூலம் 3,000 மாணாக்கர் பயன்பெறுவர்.

விடுதி மாணாக்கருக்கு படுக்கை உபகரணங்கள் அடங்கிய பெட்டகம் ரூ.4.00 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

3.பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் புதியதாக சேரும் மாணாக்கரின் தனிப்பட்ட தேவைகளை நிறைவு செய்யும்விதமாக படுக்கை உபகரணங்களான கம்பளி, போர்வை மற்றும் அன்றாட தேவைக்கான பொருட்கள் அடங்கிய பெட்டகம் ரூ.4.00 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும். இதன்மூலம் 10,000 மாணாக்கர் பயன்பெறுவர்.

பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளை பழங்குடியினரின் தேவை களின் அடிப்படையில் ரூ.13.00 கோடி மதிப்பீட்டில் மறுசீரமைக்கப்படும்.

4. பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளை மறு சீரமைத்தலின் முதற்கட்டமாக திருவண்ணாமலை மற்றும் தருமபுரி ஆகிய மாவட்டங்களில் உள்ள மேல்நிலைப் பள்ளிகளை நவீன முன்மாதிரி பள்ளிகளாகவும், மேலும் சேலம், கள்ளக்குறிச்சி, திருச்சி, பெரம்பலூர் மற்றும் தென்காசி ஆகிய ஐந்து மாவட்டங்களில் உள்ள பள்ளிகளை தேவையின் அடிப்படையில் வாகனவசதி, அறிவுத் திறன் வகுப்பறைகள் போன்ற நவீன வசதிகளுடன் பள்ளிகளை மேம்படுத்தவும் ரூ.13.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் தங்கி பயிலும் மாணாக்கரின் தனித்திறனை வளர்த்துக் கொள்ள ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் திறன் சார்ந்த திட்டங்கள்.

5. பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் பள்ளி / கல்லூரி நேரத்திற்குப் பிறகு மாணாக்கர் கலை, அறிவியல், விளையாட்டு, தகவல் தொழில்நுட்பம், மென் மற்றும் பணி திறன்களில் முழுமையான திறனை வளர்த்து கொள்வதற்கு ஏதுவாக ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் கல்லூரிகளில் "நல்லோசை" சமூக ஆய்வகங்களும், பள்ளி விடுதிகளில் "கற்றல் இனிதே" என்ற திட்டங்கள்மூலம் திறன் சார்ந்த பட்டறைகள், போட்டிகள் மற்றும் பயிற்சிகள் நடத்தப்படும்.

உயர் கல்வியில் சிறந்து விளங்கும் மாணாக்கருக்கு ரூ.41.00 இலட்சம் மதிப்பீட்டில் "உயர் திறன் ஊக்கத் திட்டம்".

6. உயர் கல்வியில் அதிக மதிப்பெண் பெறும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணாக்கரை ஊக்குவிக்கும்வகையில், அம்மாணாக்கரின் கல்வி இறுதி ஆண்டில் திறன் மேம்பாட்டு பயிற்சிக்கான பணவுறுதி ஆவணம் (Skill Vouchers) வழங்கப்படும். இத்திட்டத்திற்காக ரூ.41.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முழுநேர முனைவர் பட்டப் படிப்பிற்கான கல்வி ஊக்கத்தொகை திட்டத்தில் பயன் பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை 1,600லிருந்து 2,000 ஆக அதிகரிக்கப்படும்.

7. முனைவர் ஆராய்ச்சி படிப்புகளில் அதிக மாணாக்கர் கல்வி பயில ஊக்குவிக்கும் வகையில் 1,600 மாணாக்கருக்கு வழங்கப்பட்டு வந்த ஊக்கத்தொகை தற்போது கூடுதலாக 400 மாணாக்கருக்கு வழங்கப்படும். மேலும், இத்திட்டத்தை சீரிய முறையில் செயல்படுத்தும்வகையில் வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்படும். இத்திட்டத்திற்காக ரூ.4.00 கோடி கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும்.

"தொல்குடியினர்" புத்தாய்வுத் திட்டத்திற்காக ரூ.1.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

8. பழங்குடியினர் தொடர்பான ஆராய்ச்சி மற்றும் ஆய்வு மேற்கொள்ளும் இளங்கலை, முதுகலை, முனைவர் பட்டம், முனைவர் பட்ட மேலாய்வாளர் (Post doctoral Fellowship) போன்ற இளம் வல்லுநர்களின் திறமைகளை பயன்படுத்தும் வகையில் "தொல்குடி புத்தாய்வுத் திட்டம்" செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்காக ரூ.1.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

விவசாயத் தொழிலாளர்களாக உள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களை நில உடைமையாளர்களாக உயர்த்த நன்னிலம் மகளிர் நில உடைமைத் திட்டத்திற்கு ரூ.20.00 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

9. விவசாயத் தொழிலாளர்களாக உள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களை நில உடைமையாளர்களாக உயர்த்தி சமூக நீதியை நிலை நாட்ட இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இது மகளிரின் பெயரில் செயல்படுத்தப்படும்.

### அயோத்தி தாசப் பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூ.230 கோடி நிதி!

இதன்மூலம் விவசாய நிலம் வாங்க நிலத்தின் சந்தை மதிப்பில் 50% அல்லது அதிகபட்சம் ரூ.5.00 இலட்சம் மானியம் வழங்கப்படும். நடப்பு நிதியாண்டில் இத்திட்டத்திற்கென ரூ.20.00 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

பழங்குடியினர் வாழ்வாதாரத்தினை மேம்படுத்திட புதிய பொருளாதார முன்னெடுப்புத் திட்டங்களை ரூ.25.00 கோடியில் செயல்படுத்துதல்.

10. பழங்குடியினரின் விவசாயம் மற்றும் விவசாயம் அல்லாத தொழில்களை நவீனப்படுத்துதல், பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் உருவாக்குதல், அரசு/அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் சமூக அமைப்புகளின்மூலம் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்தல், உற்பத்தி பொருள்களுக்கான தர அடையாளம் (Brand) உருவாக்குதல், சந்தைப்படுத்துதல் போன்ற முன்னெடுப்பு திட்டங்களின்மூலம் பழங்குடியினரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட ரூ.25.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வன உரிமைச் சட்டத்தை விரைவாகவும் திறம்படவும் செயல்படுத்த ரூ.3.00 கோடியில் செயல் திட்டம்.

11. வனங்களைச் சார்ந்து வாழும் பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், பொருளாதார முன்னேற்றத்தை உறுதி செய்யவும் வன உரிமைச் சட்டத்தின்படி அனைத்து உரிமைகளையும் வனவளப் பாதுகாப்புடன் உரிய துறைகளுடன் ஒருங்கிணைந்து செம்மையாகவும், விரைவாகவும் செயல்படுத்திட ரூ.3.00 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

திருப்பூர் மாவட்டம், முதலிப்பாளையம் மற்றும் ஈரோடு மாவட்டம், ஈங்கூரில் தொழிற்பேட்டை அலகுகளை ரூ.50.00 கோடி மதிப்பீட்டில் புனரமைத்தல்.

12. திருப்பூர் மாவட்டம், முதலிப்பாளையம் மற்றும் ஈரோடு மாவட்டம், ஈங்கூரில் அமைந்துள்ள தாட்கோ தொழிற்பேட்டையிலுள்ள அலகுகளை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழில்முனைவோரின் நவீன தேவைகளுக்கேற்ப உடனடியாக தொழில் துவங்குவதற்கு ஏதுவான வகையில் அனைத்து உட்கட்ட மைப்புகளுடனான தொழிற்கூடங்கள் ரூ.50.00 கோடி மதிப்பீட்டில் புனரமை க்கப்படும்.

வீடற்ற அழிவின் விளிம்பில் உள்ள பண்டைய பழங்குடியினருக்கு 4,500 வீடுகள் கட்ட ரூ.70.00 கோடி நிதி ஒதுக்கீடு.

13. வீடற்ற அழிவின் விளிம்பில் உள்ள பண்டைய பழங்குடியினர் மற்றும் இதர பழங்குடியினருக்கு ஊரக வளர்ச்சித் துறையுடன் இணைந்து 4,500 வீடுகள் கட்டித் தரப்படும். இதற்காக ரூ.70.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பழங்குடியினர் குடியிருப்புகளின் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி தன்னிறைவு அடையச் செய்ய ரூ.100.00 கோடி ஒதுக்கீடு.

14. பழங்குடியினருக்கான சமூக மற்றும் பொருளாதார கணக்கெடுப்பின்மூலம் பழங்குடியினர் குடியிருப்புகளில் கண்டறியப்படும் அனைத்து அடிப்படை கட்டமைப்பு வசதிகளுக்கான தேவைகளை பூர்த்தி செய்வதன்மூலம் தன்னிறைவு பெற்ற குடியிருப்புகளாக மாற்றிட ரூ.100.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான வன்கொடுமைகள் தடுப்புச் சட்டத்திற்கான நெறிமுறை மற்றும் பயிற்சிக்கு ரூ.3.00 கோடி.

15. வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை திறம்பட ஒருங்கிணைத்து செயல்படுத்த இச்சட்டத்தின்கீழ் பதியப்பட்ட வழக்குகள், பாதிக்கப்பட்டோருக்கு தீருதவிகள், மறுவாழ்வு, கூடுதல் நிவாரணம், சட்ட உதவி கிடைப்பதை உறுதி செய்ய வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்படும். மாவட்ட அளவிலான விழிப்பு மற்றும் கண்காணிப்பு குழு உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் தொண்டுசாரா நிறுவனங்களுக்கும் விழிப்புணர்வு குறித்த பயிற்சி அளிக்கப்படும். இத்திட்டத்திற்கென ரூ.3.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பழங்குடியின மக்களின் குடியிருப்புகளை இணைப்பதற்கான அணுகுசாலை வசதிகளை ஏற்படுத்த ரூ.50.00 கோடி ஒதுக்கீடு.

16. பழங்குடியினரின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்திட ரூ.50.00 கோடி மதிப்பீட்டில் அணுகுசாலை வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும்.

17. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையிலும், தொழில் வல்லுநர்கள் மற்றும் நிபுணர்களை சந்திக்கும் வாய்ப்பை ஏற்படுத்தி கொடுக்கும் வகையிலும் வர்த்தக முனைவோர்களிடையே தொழில்களை மேம்படுத்தும்வகையில் தொழில்முனைவோருக்கான கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் தாட்கோ மூலம் நடத்தப்படும்.

ஆதி திராவிட மற்றும் பழங்குடியினரின் வாழ்வியல் விழா ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் நடத்தப்படும்.

18. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் பழைமைப் பண்பாடு, காப்பியம், மொழி வழி தேசப்பற்றைக் காட்சிப் படுத்தும் வகையில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் வாழ்வியல் விழா ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் நடத்தப்படும்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்திட்டங்களின் தரவுகளை மின்பதிப்பாக்கம் செய்ய ரூ.1.50 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

19.ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மேம்பாட்டுச் செயல் திட்டம் (Development Action Plan for SC/ST), வன்கொடுமை தடுப்புச் சட்டம், தொல்குடி, வன உரிமைச் சட்டம், ஆதி திராவிடர் நல மேலாண்மை அமைப்பு (ADW Management System), விடுதிகள் மேலாண்மை அமைப்பு (Hostel Management System) போன்ற பல்வேறு திட்டங்களின் கட்டமைப்புகளை கண்காணித்தல் மற்றும் கண்காணிப்பை செயல்படுத்துவதற்கான தொழில்நுட்பத் தீர்வுகள் (Technology Solution) ரூ.1.50 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அமைச்சர் திருமதி கயல்விழி செல்வராஜ் பதிலுரை வழங்கினார்.



விழுப்புரம் மாவட்டம் விக்ரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து விக்ரவாண்டி தெற்கு ஒன்றியத்தில் உள்ள செ.புதூர், செ.கொளப்பாக்கம் கிராமத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்குச் சேகரித்தார். உடன் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் சேகர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேதுநாதன், மாவட்ட துணைச் செயலாளர் ரவிக்குமார், மயிலம் வடக்கு ஒன்றியச் செயலாளர் மணிமாறன், செஞ்சி பேரூராட்சி மன்றத் தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

### ஓசூரில் தொழில் வளர்ச்சியை தடுக்கும் வகையில் பேசிய

## பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலைக்கு கடும் கண்டனம்!

### கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் தளி ஒய்.பிரகாஷ் அறிக்கை!

*ஓசூர், ஜூலை 01-*

*ஒசூர் வளர்ச்சியை தடுக்கும் பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை பேச்சுக்கு ஒசூர் எம்.எல்.ஏ. ஒய். பிரகாஷ் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*ஒசூரில் 2000 ஏக்கரில் விமான நிலையம் அமைக்கப்படும் என தமிழ்நாடுமுதலமைச்சர் சட்டப்பேரவையில் 110 விதியின் கீழ் நேற்று அறிவித்தார். இதற்கு பல்வேறு தரப்பினர்கள் வரவேற்று வரும் நிலையில் பா.ஜ.க. மாநில தலைவர் ஒசூருக்கு விமான நிலையம் வருவதை சீர்குலைக்கும் வகையில் பேசி வருகிறார்.*

*ஒசூரில் டாடா எலக்ட்ரானிக்ஸ், டி.வி.எஸ். , அசோக் லேலண்ட் போன்ற முன்னணி நிறுவனங்கள் இயங்கி வருகிறது.*

*இந்த தொழில் வளர்ச்சியை தடுக்கும் வகையில் பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை விளம்ப ரத்தை தேடும் வகையில் அறிக்கையை வெளியிட்டுள்ளார். ஒசூரில் உள்ள தொழில்துறையினர் விமான நிலையம் அமைந்தால் மேலும் வேகமான வளர்ச்சியை பெறும் என்பது உறுதி .*

*தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தமிழ்நாடு வளர்ச்சிக்காகவும், தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு அதிக அளவில் வேலை வாய்ப்பு உருவாக்கும் வகையில் தொழில் வளர்ச்சி வேகம் பெறவும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வரும் நிலையில் ஒசூரில் விமான நிலையம் அமைக்கப்படும் என அறிவித்துள்ளது.*

*அனைத்து தரப்பு மக்களும் வரவேற்று வரும் நிலையில் அண்ணாமலை மட்டும் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியை குலைக்கும் வகையில் அவர் விளம்பரத்திற்காக இது போன்று எதிர்மறையாக பேசி வருகிறார். இது தமிழ்நாடு மாநிலத்திற்கு எதிராகவும் அவர் செயல்பட்டு வருவதை கடும் கண்டனத்திற்கு உரியது.*

*உலக அளவில் வேகமாக வளர்ச்சி பெறும் நகரம் 13 வது நகரமாக ஒசூர் திகழ்ந்து வருகிறது இந்த வளர்ச்சியை மேலும் மெருகூட்டும் வகையில் ஒசூரில் விமான நிலையம் அமைத்தால் மிக விரைவான வளர்ச்சியை பெறும் இங்குள்ள தொழில் துறையினர் மட்டுமின்றி காய்கறி உற்பத்தியாளர்கள் மலர் ஏற்றுமதியாளர்கள் கிரானைட் ஏற்றுமதியாளர்கள் மாம்பழக்கூழ் ஏற்றுமதியாளர்கள், மின்சார இருசக்கர வாகன உற்பத்தி உள்ளிட்ட பல்வேறு தரப்பினர்களும் பயன்பெறும் வகையில் இந்த விமான நிலையம் அமைய உள்ளது.*

*இதனை கெடுக்கும் வகையில் பாஜக மாநில தலைவர் அண்ணாமலை பேசி வருவது அவருடைய சுய விளம்ப ரத்திற்காக பேசி வருவது கடும் கண்டனத்திற்குரியது.மத்திய அரசு கிருஷ்ணகிரி ஒசூர் ஜோலார்பேட்டை ரயில்வே பாதையை அமைக்க முன் வராத நிலையில் ஒசூரில் விமான நிலையத்தை கொண்டு வந்ததை தடுக்காமல் இருக்கலாம். ஒசூர் வளர்ச்சியை தடுக்கும் பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை கண்டித்து தொழில் அதிபர்கள் மற்றும் தொழில் முனைவோர்கள் மற்றும் பொதுமக்கள் ஒன்று திரட்டி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.*

*இவ்வாறு தளி ஒய். பிரகாஷ் தமது கண்டன அறிக்கையில் கூறியுள்ளார்.*

## தொழிற்பயிற்சி நிலையங்களில் (ஐ.ஐ.டி) பயிற்சியாளர்கள் நேரடி சேர்க்கை!

### வேலை வாய்ப்பு - பயிற்சித்துறை ஆணையர் அறிவிப்பு!

*சென்னை, ஜூலை 01-*

*தமிழகத்தில் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் கீழ் 102 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் 305 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் 20242025ம் கல்வியாண்டிற்கான பயிற்சியாளர்கள் சேர்க்கை செய்வதற்கான இணையதள கலந் தாய்வு தற்போது 28.06.2024 உடன் நிறைவு செய்யப்பட்டது.*

*இந்நிலையில் மாணவர்களின் நலன் கருதி தற்போது 8ம் மற்றும் 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கான நேரடி சேர்க்கை 01.07.2024 முதல் 15.7.2024 வரை இத்தொழிற்பயிற்சி நிலையங்களில் நடைபெற வுள்ளது.*

*மாணவர்கள் தாம் விரும்பும் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு கல்விச் சான்றிதழ்களுடன் நேரில் சென்று தாம் விரும்பும் தொழிற்பிரிவை தெரிவு செய்து தொழிற்பயிற்சி நிலையங்களில் சேரலாம்*

*சென்ற ஆண்டுகளில் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்ற பயிற்சியாளர்களில் 80% பேர் பல முன்னணி தொழில் நிறுவனங்களில் வேலைவாய்ப்பை பெற்றுள்ளனர். அரசுத் தொழிற்பயிற்சி நிலையங்களில் இன்றைய தொழிற்சாலைகளுக்கு தேவையான தொழில் 4.0 உள்ளிட்ட பல நவீன தொழிற்பிரிவுகளில் தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. இந்த அறிய வாய்ப்பை மாணவர்கள் பயன்படுத்திக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.*

*இது தொடர்பாக ஏதேனும் ஐயம் ஏற்படும் நேர்வில் கீழ்காணும் அலைபேசி எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்.*

*அலைபேசி எண் மற்றும் whatsapp எண் : 9499055689*

*இவ்வாறு வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையர் தெரிவித்துள்ளார்.*



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி ஈரோடு வடக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணியின் சார்பில் கோபி நகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு 1000 மரக்கன்றுகளை மாவட்டக் கழகச் செயலாளர் என்.நல்லசிவம் தலைமையில் சுற்றுச்சூழல் அணியின் மாவட்ட அமைப்பாளர் கே.கே.செல்வம் ஏற்பாட்டில் வழங்கப்பட்டது. நிகழ்வில் கோபி நகர்மன்ற தலைவர் என்.ஆர்.நாகராஜ், சுற்றுச்சூழல் அணி கைலாஷ் குமார், கோபி ஒன்றியக் கழகச் செயலாளர் சிறுவலூர் முருகன், பொதுக்குழு உறுப்பினர் எஸ்.எஸ. வெள்ளியங்கிரி, பவானி தெற்கு ஒன்றியக் கழக துணைச் செயலாளர் சத்தியமூர்த்தி, வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் திருவேங்கடம், இந்திரா துரைசாமி உள்ளிட்ட கழக நிர்வாகிகள், சுற்றுச்சூழல் அணியின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### திராவிடத் தமிழர் கட்சித் தலைவர்

## தோழர் வெண்மணி இணையர் சாவித்ரி மறைவு!

### தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூலை 01-

திராவிடத் தமிழர் கட்சித் தலைவர் தோழர் வெண்மணி அவர்களின் இணையர் திருமதி சாவித்ரி மறைவிற்கு தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

கழகத் தலைவர் -முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாரு:-

திராவிடத் தமிழர் கட்சித் தலைவர் தோழர் வெண்மணி அவர்களது இணையர் திருமதி. சாவித்ரி அவர்கள் மறைந்தார் என்ற செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

மனைவியின் பிரிவால் வாடும் தோழர் வெண்மணி அவர்களுக்கும், அவரது குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



விக்கிரவாண்டி தொகுதி வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவா (எ) சிவசண்முகத்தை ஆதரித்து விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி தலைமையில் விக்கிரவாண்டி கிழக்கு ஒன்றியம் சிறுவள்ளிக்குப்பம், வாக்கூர், பகண்டை, தென்வராயன்பட்டு, செய்யாத்துவிண்ணான் உள்ளிட்ட ஊராட்சிகளில் வீதி, வீதியாக உதயசூரியன் சின்னத்திற்கு டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், புதுச்சேரி எதிர்க்கட்சித் தலைவர் சிவா எம்.எல்.ஏ. ஆகியோர் வாக்குச் சேகரித்தனர். உடன் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் செந்தில், சம்பத், விக்கிரவாண்டி கிழக்கு ஒன்றியச் செயலாளர் ஜெய.ரவிதுரை, கண்டமங்கலம் ஒன்றியக் குழுத் தலைவர் ஆர்.எஸ்.வாசன், ஒன்றியச் செயலாளர்கள் பி.கே.டி.முரளி, மைதிலி இராஜேந்திரன், செயற்குழு உறுப்பினர் கோ.பாஸ்கரன், முன்னாள் இளைஞர் அணி அமைப்பாளர் எத்திராசு, ம.தி.மு.க. பாபு கோவிந்தராஜ், மாவட்டக் கவுன்சிலர் மீனா வெங்கடேசன், விவசாய அணி சீனு செல்வரங்கம், வெங்கடேசன், ஒன்றிய இளைஞர் அணி பாரதி, பகண்டை ஊராட்சி மன்றத் தலைவர் சீனிவாசன், ஒன்றிய நிர்வாகிகள் கண்ணையன், செல்வராஜ், தன்ராஜ், நாவப்பன், ராஜமாணிக்கம், சாம்பசிவம் சபரி, நகரப் பொருளாளர் என்.என்.இளங்கோ, வர்த்தக அணி கோல்டு வெங்கடேசன், தகவல் தொழில்நுட்ப அணி ப.அன்பரசு உள்ளிட்ட பலர் இருந்தனர்.